தலைப்பு 320 – சிவில் பாதுகாப்பு திணைக்களம் - 2024

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 320 – சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடங்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தின் 11(1) நிதிக்கூற்றுக்கள் பிரிவின் பிரகாரம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் மீதான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 15 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 மே 30 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிட்டுள்ள விடயங்களிலான தாக்கத்தை தவிர்த்து, சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களினால், நிதி நிலைமை, நிதிசார் செயலாற்றுகை மற்றும் காசுப் பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுடன் தொடர்புடைய குறிப்பு 1 இல் குறிப்பிடப்படும் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மைகள் தொடர்பில் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது ணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனதுஅபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆம் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆம் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின், பொது திறைசேரியின் மற்றும் பாராளுமன்றத்தின் தேவைப்பாட்டிற்கு தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை சிவில் பாதுகாப்பு திணைக்களத்தின், பொதுத் திறைசேரியினதும் பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

அரச நிதிப்பிரமாணம் 150 உம் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 திகதி திருத்திய 2024 திசெம்பர் 16 திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி 06/2024 இலக்கத்திற்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையினை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில உள்ளகக் கட்டுப்பாடுகளை தீர்மானிப்பது பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரை

1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்

(அ) வருமான பெறுவனவு

திணைக்களத்திற்கான வருமானங்களை கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	விவசாய, கால்நடை மற்றும் ஏனைய, இசை மற்றும் நடனம், பாதுகாப்பு சேவை, நிர்மாணம் மற்றும் பராமரிப்பு சேவை ஆகிய பிரிவுகளின் மூலம் திணைக்களம் வருடாந்தம் வருமானம் சேகரிப்பதுடன், அந்த வருமான மூலங்களிலிருந்து மீளாய்வாண்டில் கூட்டுத் தொகை ரூபா 2,173,717,340 வருமானம் உழைத்ததாக மீளாய்வாண்டினுள் வெளிப்படுத்தப்பட்டு இருந்தது. வருடாந்தம் உழைக்கும் இந்த வருமானத்தை கணக்கீடு செய்ய அரச நிதிக் கொள்கை திணைக்களத்திடம் வினவி வெறு வருமானத் தலைப்பை பெற்றுக் கொள்ள மீளாய்வாண்டிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	வருமான தலைப்புகளை அங்கீகரிக்க முன் திணைக்களத்திற்காக சட்டமொன்றை தயாரித்து வருமானம் உழைத்தல் எனும் பணியையும் உள்ளடக்கி சட்டத்தை அங்கீகரித்துக் கொள்ள வேண்டுமென அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. திணைக்களத்தை மறுசீரமைக்கும் வேலைத் திட்டத்தின் காரணமாக சட்டத்தை தயாரிப்பதனை விரைவில் செய்து கொள்ள முடியாதென அறிவிக்கிறேன்.	வருமானம் தொடர்பாக கணக்கீட்டுப் பணிக்காக வருமானத் தலைப்பொன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ii)	2022 மற்றும் 2023 ஆண்டுகளில் அரிசி விற்பனையால் மெதிரிகிரிய படைக்கு ரூபா 575,475 தொகையும், உஹன படைக்கு ரூபா 1,200,000 தொகையும், மஹஓய படைக்கு ரூபா 1,063,047 தொகையுமா கிடைக்க வேண்டிய மொத்த தொகையான ரூபா 2,838,522 வை கருத்திட்ட பிரிவினால்	திணைக்கள கருத்திட்டங்கிற்குரிய நிலுவை வருமானத்தை இனங்கண்டு அறிக்கையிட அறிவுரை வழங்கியுள்ளதுடன் அதன் பிரகாரம் அனைத்து நிலுவை வருமானம் தொடர்பாகவும் கண்டறிந்து	நிதிக்கூற்றுக்களில் வருமானத்தை சரியாக அறிக்கையிட வேண்டும்.

இனங்கண்டு அறிக்கையிட்டு இருக்காததால் 2023 ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்காததால் மீளாய்வாண்டில் நிலுவை வருமான பெறுமதி ரூபா 2,838,522 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	அறிக்கையொன்றை தயாரிக்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் அவ்வறிக்கையை தயாரித்து பிரதியொன்றை வழங்க நடவடிக்கை எடுக்கிறேன்.	

(ஆ) ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள்

ஆதன பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கீடு செய்யும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i)	ரூபா 4,500,000 பெறுமதியான WPGP-8951 இலக்க டபல் கெப் வண்டியை நிதிக்கூற்றுக்களில் கார் வண்டியாக மற்றும் டபல் கெப் வண்டியாக இரண்டு முறை உட்படுத்தியிருந்ததுடன் அதன் பிரகாரம் அப்பெறுமதியால் ஆதனம், பொறிக்ள் மற்றும் உபகரணங்கள் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தன.	2024/12/31 திகதி கணக்கீடு செய்யப்பட்ட ரூபா 4.5 மில்லியனான பெறுமதியுடைய WPGP-8951 வண்டி இரட்டை பதிவாகியுள்ள தவறை சிகாஸ் தொகுதியூடாக பராதீனம் செய்து அத்தவறை நிவர்த்தி செய்துள்ளதாக அறிவிக்கிறேன்.	ஆதனம், பொறிக்ள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை கணக்கீடு செய்ய வேண்டும்.
(ii)	திணைக்களத்திற்கு சொந்தமான 341 மிதிவண்டிகளில் 277 இனது பெறுமதி மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருந்ததுடன் 34 மிதிவண்டிகளின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	இந்த மிதிவண்டிகளை பராதீன செயன்முறைக்கு அனுப்ப தேவையான நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	ஆதனம், பொறிக்ள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(iii)	திணைக்களத்திற்கு சொந்தமான 05 காணித் துண்டுகளின் மதிப்பீட்டு பெறுமதி கூட்டுத் தொகை ரூபா 17,262,500 நிதிக்கூற்றுக்களில் ACA 6 இனுள் உள்ளடக்கியிருக்காததன் மீது மீளாய்வாண்டில் நிதி நிலைமைகூற்றில் ஆதனம், பொறிக்ள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி ரூபா 17,262,500 இனால் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது.	2025 முதலாம் காலண்டினுள் கணக்கீடு செய்து நிறைவு செய்யப்பட்டுள்ளது.	ஆதனம், பொறிக்ள் மற்றும் உபகரணங்களின் பெறுமதியை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(iv)	மீளாய்வாண்டு இறுதியில் உரிமையை சுவீகரித்திருந்த ஹெக்டயார் 10.6313 அளவான 20 காணித்துண்டுகளை மதிப்பிட்டு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கி இருக்கவில்லை.	இக் காணியை மதிப்பீடு செய்ய மதிப்பீட்டு திணைக்களத்திற்கு கோரிக்கை விடப்பட்டுள்ளதுடன் மதிப்பீடறிக்கை கிடைத்த பின்னர் விரைவில் கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன்.	மதிப்பீட்டு அறிக்கையை விரைவில் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்து சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.

(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் பின்வரும் பதிவேடுகள் மற்றும் புத்தகங்களை பேணியிருக்காததுடன், சில பதிவேடுகள் ஒழுங்காக மற்றும் நாளாதுவரையாக பேணியிருக்கவில்லை என மாதிரி கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(i) சேதங்கள் தொடர்பான பதிவேடு		
சேதங்கள் தொடர்பான பதிவேட்டை குறித்த பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டு விபரமாக பேணிச் சொல்ல வேண்டிய போதும் நிர்வாக பிரிவினால் பேணிச் செல்லும் சேதங்கள் தொடர்பான பதிவேட்டில் குறித்த விபரங்களை பதியும் போது ஒழுங்கீனமாக பதிதல், உரிய அதிகாரமின்றி பதிவுகளை திருத்துதல் மற்றும் பதிவேட்டில் பதிவு செய்யப்படாத சேத நட்டங்கள் காணப்படல் போன்ற குறைகள் அவதானிக்கப்படட்ன.	சேத நட்ட பதிவேட்டில் ஒழுங்கீனமாக பென்சிலினால் பதிதல், சரியாக பதிதல் மற்றும் பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாத குறைகளை நிவர்த்தி செய்தல் என்பன தற்பொது இடம்பெற்று வருதாக மற்றும் 2025 மே முதல் நாளாதுவரையாக மற்றும் ஒழுங்காக சேத நட்ட பதிவேட்டை பராமரிக்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	நிதிப் பிரமாணம் 110 இன் ஏற்பாடுகள் பிரகாரம் அதன் கீழுள்ள படிவத்தின் பிரகாரம் சேதம் தொடர்பான பதிவேடொன்றை பேணிச் செல்ல வேண்டும்.
(ii) கடன் மற்றும் முற்பண பதிவேடு		
2017 ஜுலை 05 இன் 256/2017 இலக்க அரசக கணக்குகள் சுற்றறிக்கையின் 05 பந்தி பிரகாரம் திணைக்களத்தினால் ஒவ்வொறு அலுவலர்களிற்காகவும் ஆரம்பப மீதி மற்றும் அந்த அந்த மாதத்தில் கழிக்கப்பட்ட கடன் தொகை அளவை மற்றும் வட்டி மற்றும் திசெம்பர் 31 திகதி கடன் தொகையிலிருந்து மேலும் அறவிடப்பட வேண்டிய மீதியை காண்பித்து CC – 10 கடன் மற்றும் முற்பண பதிவேடொன்றை பேணியிருக்காததுடன், கணனி விரிதாளின் உதவியுடன் கடன் மீதி மற்றும் அறவீடுக்ள பதியப்பட்டிருந்தன.	இந்த திணைக்களத்தில் தற்போது 32,000 அளவான சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்கள் கடமையாற்றுவதுடன், கடன் மற்றும் முற்பணம் தொடர்பாக CC 10 பதிவேட்டை பராமரிப்பது நடைமுறை சாத்தியமற்றதாகும். அதனால் கணனி விரதாளின் உதவியுடன் CC 10 நாளாதுவரையாக்கப்படுவதாக அறிக்கிறேன்.	2017 ஜுலை 05 இன் 256/2017 இலக்க அரசக கணக்குகள் சுற்றறிக்கையின் 05 பந்தி பிரகாரம் சீ.சீ. 10 மற்றும் அந்த படிவத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண பதிவேட்டை தயாரிக்க வேண்டும்.

2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாகும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்படடிருக்கவில்லை.

கடந்த ஆண்டு அறிக்கையின் பந்தித் தொடர்பு	செயற்படுத்தியிருக்காத பரிந்துரை	இந்த அறிக்கையின் பந்தித் தொடர்பு
1.6.2 (அ) (i)	வருமான தலைப்புக்களை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்	1.6.1 (அ) (i)
1.6.2. (அ) (ii)	அனைத்து கருத்திட்ட வருமானங்களையும் நாளாதுவரையாக சரியாக கணக்குகளில் இனங்காண நடவடிக்கை எடுக்க வேண்டும்.	1.6.1 (அ) (ii)
1.6.2. (ஆ) (ii)	ஆதன பொறிகள் மற்றும் உபகரங்களின் சரியான பெறுமதிகள் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும்.	1.6.1 (ஆ) (iii)
1.6.2. (ஆ) (iii)	ஆதன பொறிகள் மற்றும் உபகரங்களை மதிப்பீடு செய்து சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும்.	1.6.1 (ஆ)(iv)
1.6.2 (இ)	2017 ஜுலை 05 இன் 256/2017 இலக்க அரசக கணக்குகள் சுற்றறிக்கையின் 05 பந்தி பிரகாரம் சீ.சீ. 10 மற்றும் அந்த படிவத்தை அடிப்படையாகக் கொண்டு கடன் மற்றும் முற்பண பதிவேட்டை தயாரிக்க வேண்டும்.	1.6.1 (இ)(ii)
2.1	நிலுவை வருமானங்களை விரைவில் அறவிட வேண்டும்.	3.1
2.2 (i)	தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் செலவுகளை இயலுமானவரை முகாமை செய்து கொள்ள வேண்டும்.	3.2 (அ)
2.2 (ii)	மதிப்பீட்டை இயலுமானவரை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.	3.2 (ஆ)
3.3 (அ)	கணக்கு பிரிவு மற்றும் நிர்வாக பிரிவின் தகவல்களிற்கு இடையே முரண்பாடுகள் இடம்பெறாதவாறு நடவடிக்கை எடுக்க வேண்டும்.	4.3 (ஈ),(உ),(ஊ)

3. நிதி மீளாய்வு

3.1 வருமான முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
சிவில் பாதுகாப்பு திணைக்களத்தினால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களிற்கு வழங்கிய பாதுகாப்பு மற்றும் ஏனைய சேவைகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை	CML நிறுவனம் மற்றும் தொலைத் தொடர்பு ஒழுங்கமைப்பு ஆணைக்குழு தொடர்பாக சட்ட நடவடிக்கை இடம்பெறுவதுடன், எஞ்சிய நிறுவனங்களிற்கு நிலுவைத்	அறவீடு தாமதமாகிக் காணப்படும் நிலுவை வருமானத்தை விரைவில் அறவிட சட்ட ரீதியாக மற்றும் நிர்வாக நடவடிக்கைகளை

ரூபா 135,854,993 நிலுவை வருமானத்தை அறவிட வேண்டியதாக காணப்பட்டது. அதில் ரூபா 13,655,053 ஆன நிலுவை வருமானத்தை மீளாய்வாண்டு இறுதி வரையும் அறவிட முடியாது 01 அணடு முதல் 07 ஆணடுகள் வரையான காலத்தை எடுத்திருந்தது.	தொகையை விரைவில் தீர்க்குமாறு த்தியோகபூர்வமாக அறிவித்துள்ளதுடன், மாதாந்தம் நினைவூட்டல் அனுப்பி அறவிட நடவடிக்கை எடுக்கிறேன்.	எடுக்க வேண்டும்.

3.2 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப் பிரமாணம் 50 பிரகாரம் நியாயமான முறையில எதிர்வுகூற முடியுமான அனைத்து சேவைகளையும் மதிப்பீடுகளில் உள்ளடக்கியுள்ளதாகவும் அவை நிதியாண்டினுள் அடைந்து கொள்ள முடியுமென மற்றும் மதிப்பீடுகளை இயலுமானவரை பூரணமாகவும் சரியாகவும் தயாரித்துள்ளதாகவும் கணக்கீட்டு உத்தியோகத்தர் பொறுப்பேற்க வேண்டிய போதும், திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக தயாரித்த மதிப்பீடு மாற்றப்படும் முரண்பாடு 100 சதவீதம் முதல் 323 சதவீதம் வரயான வீச்சளவை எடுத்திருந்தது.	2025 ஆண்டில் மதிப்பீடு தயாரிக்கும் போது இவ்வாறான குறைபாடுக்ளை குறைத்துக் கொள்ள இயலுமானவரை சரியான மற்றும் எதிர்வுகூறலின் மீது மதிப்பீட்டை தயாரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன்.	தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரகாரம் செயற்படும் போது முரண்கள் அற்றதாக இயலுமானவரை முகாமை செய்து கொள்ள வேண்டும்.
(ஆ)	18 செலவு விடயங்களில் நிதி ஏற்பாட்டை விஞ்சி 12 சதவீதத்திலிருந்து 69 சதவீதம் வரையான வீச்சளவில் காணப்பட்டதுடன், அவற்றில் 07 செலவு விடயங்களில் நிதிஏற்பாட்டை குறைத்த பின்னரும் எஞ்சி இருந்தது. மேலும், 04 செலவு விடயங்களில் நிதி ஏற்பாட்டை நிதிப்பிரமாணம் 66 மூலம் அதிகரித்த பின்னரும் எஞ்சியிருந்தது.	2025 ஆண்டில் திணைக்களத்தினுள் நிதி ஏற்பாடு மிகையாகாத வகையில் நிதி ஏற்பாட்டை சிறப்பாக முகாமைத்துவம் செய்ய தேவையான அறிவுரை வழங்கியுள்ளதாக அறிவிக்கிறேன்.	மதிப்பீடுகளை இயலுமானவரை சரியாக தயாரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.3 சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் பொது அவதானிக்கப்பட்ட சட்டம், விதி மற்றும் பிரமாண ஏற்பாடுகளிற்கு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு			கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
	சட்டம், விதி மற்றும் பிரமாணங்களுடன தொடர்பு	**பெறுமதி ரூபா**	**இணங்காமைகள்**		
(அ)	2016 திசெம்பர் 29 இன் 30/2016 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை 3.1 பந்தி	-	ஒவ்வொறு எரிபொருள் பரிசோதனையின் 12 மாதங்களின் பின்னரும் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூரத்தை செலுத்திய பின்னர் அல்லது இயந்திரத்தின் பிரதான திருத்தத்தின் பின்னர் எனும் விடயங்களிற்கு இடையே, முதலாவது இடம்பெறும் சந்தர்ப்பத்தின் பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதணை செய்ய வேண்டிய போதும், திணைக்களத்திற்கு சொந்தமான 125 வாகனங்கள் தொடர்பாக மீளாய்வாண்டில் அவ்வாறான எரிபொருள் பரிசோதனை செய்திருக்கவில்லை.	திணைக்களத்திற்கு சொந்தமான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய வாகணங்களின் எண்ணிக்கை 413 ஆகும். அவ்வற்றில் மீளாய்வாண்டில் எரிபொருள் பரிசேதனை செய்ய வாகனங்களின் எண்ணிக்கை 288 ஆவதுடன், எஞ்சிய 125 வாகனங்களின் எரிபொருள் பரிசோதனை கட்டம் கட்டமாக மேற்கொள்ளப்படுகின்றது.	எரிபொருள் பரிசோதனையை சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொண்டு நாளாதுவரையான பெறுமானங்களின் மீது ஓட்டக் குறிப்புகள் தயாரிக்கப்பட வேண்டும்.
(ஆ)	2017 ஏப்ரல் 19 இன் 03/2017 இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை மற்றும் 2009 ஏப்ரல் 16 திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை	-	அனைத்து அரச நிறுவனங்களிலும் விரல் அடையாள இயந்திரத்தை பயன்படுத்தி அலுவலர்களின் வரவு மற்றும் வெளிச் செல்லலை உறுதி செய்ய அறிக்கை பேணிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய போதும் மாதிரி பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட பிரகாரம் 800 அலுவலர்கள் உள்ள ஹொரொவபதான படையில் விரல்அடையாள இயந்திர மொன்று இருக்காததுடன் 813 அலுவலர்கள் உள்ள கடுநாயக படையில் விரல் அடையாள இயந்திரமொன்று செயலிழந்து 04 மாதங்கள் காணப்பட்டன.	கட்டுநாயக படையின் விரல் அடையாள இயந்திரத்தின் திருத்த வேலைகள் முடிவடைந்த பின்னர் விரைவில் இஸ்தாபிப்பதுடன் 2025 ஆண்டினுள் ஹொரொவபதான படை தலைமையகத்தில் விரல் அடையாள இயந்திரமொன்றை இஸ்தாபிக் திட்டமிடப்பட்டுள்ளது.	அலுவலர்களின் வரவு மற்றும் வெளிச் செல்லல் தொடர்பாக சுற்றறிக்கை பிரகாரம் விரல் அடையாள இயந்திரம் பயன்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(இ)	அமைச்சரவை தீர்மாண இலக்கம் IAD/GA15/8/ அ.விஞ்ஞாபனம் /2 கொண்ட 2015 பெப்ரவரி 09 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 03 பந்தியின் (01) பிரகாரம் மற்றும் அந்த விஞ்ஞாபனத்துடன் தொடர்புடைய இலக்கம் அமப/15/0089/ 610/003 கொண்ட 2015 மார்ச் 05 திகதிய அமைச்சரவை தீர்மாளம்.	1,292,760,000	மத புனிதத்தலங்கள் ஆகியவற்றில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான நிர்மாணங்களிற்காக திணைக்களத்தின் ஊழியப் படையை பயன்படுத்த பரிந்துரைத்து அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கு மாற்றமாக திணைக்களத்தினால் மத புனிதத்தலங்களில் பாதுகாப்பு கடமைகளிற்காக 370 இனரை, நலன்புரி மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளிற்காக 1,812 இனரை, சாரதி கடமைகளிற்காக 202 இனரை மற்றும் ஏனைய கடமைகளிற்காக 10 இனர்களையுமாக கூட்டுத் தொகை 2,394 ஆன படையினர்/ பெண் படையினரை ஈடுபடுத்தி 2024 ஆண்டின் போது சம்பளமாக ரூபா 1,292,760,000 இனை செலவிடப்பட்டிருந்தது.	இது யுத்தம் நிலவிய காலத்தின் போது, அந்த அச்சுறுத்தப்பட்ட கிராமங்களில் புனிதஸ்தலங்களிற்கு கடையினரை வழங்கி ஆரம்பிக்கப்பட்டதுடன், பின்னர் மத இஸ்தலங்களிற்கு அதிக எண்ணிக்கையில் இவ்வாறு வழங்கப்பட்டுள்ளது. நீண்ட காலமாக மேற்கொண்டுள்ள இந்த செயற்பாடு தொடர்பாக பாராளுமன்ற கணக்குகள் செயற் குழு கூட்டத்திலும் கலந்துரையாடிய போதும் இதுவரை அது தொடர்பாக எடுக்க வேணடிய செயற்பாடுகள் தொடர்பாக திட்டவட்டமான அறிவுரை கிடைத்திருக்க வில்லைலை. எனினும் எதிர்காலத்தில் திணைக்களத்தின் மறுசீரமைப்பு நிகழ்ச்சித்திட்டத்தின்கீழ் இதற்காக பதிலை எதிர்பார்த்து இருக்கிறேன்.	அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் அமைச்சின் சட்டரீதியான அங்கீகாரத்தின் கீழ் மாத்திரம் புனிதத்தளங்களிற்கு படையினர்/பெண் படையினரை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	அமைச்சரவை தீர்மாண இலக்கம் IAD/GA15/8/ அ.விஞ்ஞாபனம் /2 கொண்ட 2015 பெப்ரவரி 09 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 03 பந்தியின் (01) பிரகாரம் மற்றும் அந்த விஞ்ஞாபனத்துடன் தொடர்புடைய	727,920,000	சட்டரீதியான ஏற்பாடுகள் இல்லாது திணைக்களத்தில கடமையாற்றும் படையினர்/ பெண் படையினர் 4,044 அளவினர் 2024/2025 பெறும் போகத்தின் போது பங்குவேளான்மை நடவடிக்கைகளிற்காக 04 மாதகாலத்திற்கு விடுவிக்கப்பட்டனர். இந்த காலப் பகுதிக்காக இந்த படையினர்/ பெண் படையினரிற்கு அன்னளவாக சம்பளம் ரூபா 727,920,000 தொகை	கடந்த ஆண்டுகளிலும் பங்குவேளான்மை நெல் கருத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதுடன், படையினர்/ பெண் படையினர் குறை பயன்பாட்டுடன் படையில் இருப்பதை விட இவ்வாறான கருத்திட்டங்களில் ஈடுபடுத்தி வருமானம் ஊழைக்க முடிவத ஆக்கபூர்வமானதாகும். விவசாய கருத்திட்டம் மற்றும் பங்குவேளான்மை கருத்திட்டம்	சட்ட ரீதியான ஏற்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும்.

இலக்கம் அமப/15/0089/ 610/003 கொண்ட 2015 மார்ச் 05 திகதிய அமைச்சரவை தீர்மாளம்.	செலவிடப்பட்டிருந்தது.	தொடர்பாக கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுக்க அமைச்சின் குழுவொன்றை நியமிக்க தீர்மானித்துள்ளதுடன் கிடைத்த அனைத்து வருமாங்களும் திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது.

3.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

(i) அதிகாரமற்ற கொடுப்பனவுகள்

திணைக்களத்தினால் அதிகாரமின்றி பின்வரும் கொடுப்பனவுகளை செலுத்தியிருந்தது.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலக்கம் PG - 0423 கொண்ட வண்டியை 2024 ஜுன் 18 திகதி இயந்திர தொகுதியில் தவறொன்றின் காரணமாக திருத்த வேலைக்காக தனியார் வாண்டிச்சாலை ஒன்றிற்கு அனுப்பி வண்டியின் பாகங்களை கழற்றி மற்றும் மாற்றியிருந்த போதும், அதற்கு ஒழுங்கான அனுமதி மற்றும் தொழில்நுட்ப அலவலர் ஒருவரின் மேற்பார்வையின்றி செய்யப்பட்டிருந்தது.	அதிகமாக உராய்வு எண்ணெய் எரிதல் மற்றும் ஹெட்யிலிருந்து தவறான சத்தம் ஏற்படுதல் காரணமாக PG – 0423 வண்டியை வண்டிச்சாலை ஒன்றிற்கு அனுப்பி பரீட்சித்ததுடன் அது உள்ரீதியான தவறாகையால் தவறை இனங்காண வானத்தை கழற்றி பரீட்சிக்கப்பட்டுள்ளது. நிதிப் பிரமாணம் 103 மற்றும் 104 இன் கீழ் விசாரணை ஒன்றை மேற்கொள்ள நடவடிகைக எடுப்பதாக அறிவிக்கிறேன்.	அரச வாகனங்களை திருத்தும் போது உரிய அங்கீகாரம் மற்றும் மேற்பார்வையின் கீழ் திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	PG – 0425 வான் வண்டியின் இயந்திர தொகுதியின் திருத்தம் ஒன்று 2023 திசெம்பர் மாதத்தில் செய்த பின்னர், கிலோ மீற்றர் 1,896 அளவு செலுத்தி இருக்கையில் இயந்திரத் தொகுதி முழுமையாக சேதத்திற்கு உள்ளாகியதன் மீது 2024 ஆகஸ்ட் மாதம் ஒட்டத்திலிருந்து அகற்றப்பட்டிருந்தது. முதலாம் திருத்தத்தின் போது பொருத்திய உதிரிப் பாகங்கள் தொடர்பாக எவ்வித பரீட்சிப்பும் செய்திருக்காததுடன் அந்த பகுதிகள் சேதத்திற்குட்பட்டதன் மீது மீண்டும் இயந்திரத் தொகுதியை திருத்துவதற்காக ரூபா 1,711,315 ஆன மதிப்பீடொன்று	நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் நிதிப் பிரமாணம் 104(4) விசாரணை நடவடிக்கைகளை நிறைவு செய்து விரைவில் விசாரணை அறிக்கையை வழங்க அறிவுரை வழங்கியுள்ளதாக அறிவிக்கிறேன்.	வாகன திருத்த வேலைகளை உரிய காலத்தில் மற்றும் உரிய மேற்பார்வையுடன் மேற்கொள்ள வேண்டியமை மற்றும் பொறுப்பு வாய்ந்த அலுவலர்களை இனங்காண வேண்டியமை.

	சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்த நிலைமைக்கு பொறுப்பு வாய்ந்த அலுவலர்களை இனங்காண நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.		
(இ)	2024 ஜுலை 19 திகதிய சிஆதே/RJD/போக்/தகோ/01(08) சபை அறிக்கை பிரகாரம் இலக்கம் 65 – 4873 கொண்ட வண்டியின் குறித்த திருத்தம் சரியாக மேற்கொள்ளப்பட்டுள்ளது என பதியப்பட்டிருந்ததுடன், அதன் அடிப்படையில் ரூபா 2,159,975 தொகை 2024 ஒக்டோபர் 14 திகதி செலுத்தப்பட்டிருந்தது. மீண்டும் அந்த வண்டியின் தவறுடனான நிலைமை காரணமாக 2024 நவம்பர் 14 திகதி வண்டிச் சாலைக்கு அனுப்பியிருந்ததுடன் வண்டியை உரியவாறு திருத்தியுள்ளதாக பரீட்சிக்காது சமர்ப்பிக்கப்பட்ட சம்பூரணமற்ற சபை அறிக்கையின் மீது மேற்குறித்த தொகை செலுத்தப்பட்டிருந்தது.	இந்த வண்டியை விரைவில் திருத்தி மீண்டும் பெற்றுக் கொள்ளவும், திருத்தத்தை நிறைவு செய்த திகதியிலிருந்து மீண்டும் எதிர்காலத்திற்கு ஒரு வருட உத்தரவாத காலத்தை பெற்றுக் கொள்ளவும், போக்கு வரத்து பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டது. தற்போது திருத்த நிறுவனத்தின் பிரதிநிதிகளை அழைப்பித்து கலந்துரையாடியுள்ளதுடன் அதன் பிரகாரம் இந்த வாகனத்தை விரைவில் திருத்தி பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	வாகன திருத்தத்திற்காக கொடுப்பனவு செய்யும் போது திருத்த வேலைகள் உரியவாறு மேற்கொள்ளபட்டுள்ள தாக தொழில்நுட்ப அலுவலரின் சான்றிதழை பெற்றுக் கொள்ள வேண்டியமை.
(ஈ)	இலக்கம் GD – 7248 கொண்ட ஜீப் வண்டியின் இயந்திரத்தை முழுமையாக திருத்த பரிந்துரைத்திருக்கையில் அந்த திருத்தத்தை மேற்கொள்ளாது 08 மாதங்களில் கிலோ மீற்றர் 693 செலுத்தப்பட்டிருந்ததுடன், ஒட்டத்தின் போது வளிப்பதனாக்கி தொகுதியில் ஏற்பட்ட குறை காரணமாக இயந்திரம் செயலிழந்திருந்தது. வண்டியை திருத்துவதற்கு ரூபா 997,300 செலவிட்டிருந்த போதும், கவனயீனமாக வண்டியை செலுத்திய தொடர்பாக பொறுப்பு வாய்ந்த தரப்பினரை இனங்கண்டிருக்கவில்லை.	இது தொடர்பாக சபையொன்றை நியமித்து முன்நடவடிக்கை எடுக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.	வாகன திருத்தம் மற்றும் வாகன பராமரிப்பு தொடர்பான அலுவலர்கள் தமது கடமைப் பொறுப்பை உரியவாறு செய்வதனை பொறுப்பேற்க வேண்டும்.
(உ)	2015 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை திணைக்களத்தினால் மரணித்த 30 அலுவலர்களிற்கு மற்றும் ஓய்வுபெற்ற 24 அலுவலர்களிற்கு கூடுதலாக செலுத்தியிருந்த ரூபா 626,027 தொகை மற்றும் அக் காலத்தினுள் சேவையை விட்டுச் சென்ற 45 அலுவலர்களிற்கு கூடுதலாக செலுத்திய ரூபா	மரணித்த மற்றும் ஓய்வுபெற்ற அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய மீதிகளை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிட ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறவித்துள்ளதுடன, சேவையை விட்டுச் சென்ற அலுவலர்களிடம் இருந்து அறவிட வேண்டிய மீதிகள் தொடர்பாக குறித்த அலுவலர்களிற்கு கடிதம் மூலம்	சம்பளம் செலுத்துவது தொடர்பாக உள்ளக கட்டுப்பாட்டை வழுப்படுத்த வேண்டியமை மற்றும் கூடுதலாக செலுத்திய சம்பளத்தை விரைவில் அறவிட

	1,281,196 ஆன சம்பளத்தை மீளாய்வாண்டு இறுதிவரை அறவிட்டிருக்கவில்லை.	அறிவுருத்தியுள்ளதுடன், அவர்களின் சேமலாப நிதி காணப்பட்டால் அதிலிருந்து அறவிடப்படவுள்ளது.	நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

மாதிரி கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்படட மோசடி தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இரண்டு இராணுவ அலுவலர்களிற்கு, இராணுவத்தால் எரிபொருள் மற்றும் சாரதியுடன் வாகனம் வழங்கியிருக்கும் போது தேசிய பாதீட்டு திணைக்களத்தின் அறிவுரைகளிற்கு முரணாக திணைக்களத்தினாலும் எரிபொருள் மற்றும் சாரதியுடன் வாகனம் சட்டவிரோதமாக வழங்கியதால் 2024 ஜுலை முதல் செப்டம்பர் வரை 03 மாதத்தினுள் மாத்திரம் ரூபா 287,473 தொகை மற்றும் ரூபா 913,767 தொகையாக அந்த இரண்டு அலுவலர்களிற்காக செலவிடப்பட்டிருந்தது.	கணக்காய்வு ஐயவினா தொடர்பாக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் பற்றி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியதுடன் அமைச்சினால் சபையொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	உத்தியோகபூர்வ வாகனம் வழங்கியிருக்கையில் சுற்றறிக்கைகளிற்கு முரணாக மீண்டும் வாகனம் அந்த அலுவலர்களிற்கு வழங்கக் கூடாதென.
(ஆ)	சட்ட ரீதியான ஏற்பாடுகள் இல்லாதிருக்கையில் ஒரு அலுவலர் காலி பிரதேச வீட்டிற்கு செல்ல 27 பிரயாணத் தடவைகளிற்கு ரூபா 115,875 ஆன எரிபொருள் 375 லீற்றர்க்ள செலவிடப்பட்டிருந்தது. அவ்வாறே இன்னுமொரு அலுவலரிற்கு வழங்கியிருந்த வண்டியொன்றின் ஒட்டக் குறிப்பை பரீட்சிக்கையில் அங்கு குறிப்பிடும் இடங்களிற்கு அலுவலர் பிரயாணம் செய்ததாக கணக்காய்விற்கு உறுதியாகவில்லை.	கணக்காய்வு ஐயவினா தொடர்பாக எடுக்க வேண்டிய செயற்பாடுகள் பற்றி அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடியதுடன் அமைச்சினால் சபையொன்றை நியமிக்க தீர்மானிக்கப்பட்டதாக தயவுடன் அறிவிக்கிறேன்.	உத்தியோகபூர்வ வாகனம் வழங்கியிருக்கையில் சுற்றறிக்கைகளிற்கு முரணாக மீண்டும் வாகனம் அந்த அலுவலர்களிற்கு வழங்கக் கூடாதென.

3.6 முற்பண விநியோகம் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2020 ஆகஸ்ட் 28 திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 01/2020 இன் 9.1 மூலம் திருத்திய நிதிப் பிரமாணம் 371(2) (ஆ) மற்றும் 371(5) பிரகாரம் ஏதெனும் விசேட பணிக்கா வழங்கிய உப கட்டுநிதியை அப்பணி	வழங்கிய முற்பணத்தை 10 நாட்களிற்குள் மீண்டும் தீர்க்க வேண்டுமென அறிவித்து குறித்த நபர்களிற்கு அறிவிக்கப்பட்டது. மீண்டும் தாமதம் ஏற்படாதவாறு நடவடிக்கை எடுக்க குறித்துக் கொண்டேன். இது தொடர்பாக	சுற்றறிக்கை பிரகாரம் உரிய காலத்தினுள் முற்பணத்தை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

	முடிவடைந்த உடனே அல்லது குறித்த பணி முடிவடைந்து 10 நாட்களிற்குள் மீண்டும் தீர்க்க வேண்டிய போதும், மீளாய்வாண்டு சனவரி முதல் திசெம்பர் 31 வரை 41 சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த கூட்டுத் தொகை ரூபா 1,622,334 ஆன முற்பணம் 14 நாட்கள் முதல் 346 நாட்கள் வரையான தாமதத்துடன் தீர்க்கப்பட்டிருந்தது.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாடி மேலும், உள்ளக கட்டுப்பாட்டை வழுவூட்ட நடவடிக்கை எடுப்பதென அறிவிக்கிறேன்.	
(ஆ)	மீளாய்வாண்டு சனவரி 30 திகதி பிரதி பணிப்பாளர் (பெறுகைகள்) இற்கு ரூபா 75,000 தொகை முற்பணமாக வழங்கியிருக்கையில் அதனை தீர்க்க முன்னர் மீண்டும் பெப்ரவரி 02 திகதி அந்த அலுவலரிற்கு ரூபா 100,000 தொகை முற்பணமாக வழங்கியிருந்ததுடன், அதன் பிரகாரம் அந்த அலுவலரின் கையில் அந்த காலப் பகுதியில் நிதிப் பிரமாணத்திற்கு மாற்றமாக ரூபா 175,000 தொகை காணப்பட்டது.	முற்பணம் தொடரபான நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் ஒழுங்கான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையொன்றை 2025 மே முதல் இஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் அதன் முன்னேற்றத்தை திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டத்தில் கலந்துரையாட எதிர்பார்க்கிறேன்.	அத்தியவசிய சந்தர்ப்பங்களில் மாத்திரம் எல்லைகளை மீறப்படாத வகையில் முற்பணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

2024 இன் 44 இலக்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் 47(4) உப பிரிவின் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை நிதியாண்டு முடிவடைந்து 180 நாட்கள் அல்லது அதற்கு முன்னர் வெளியிட வேண்டும். 2020 ஆகஸ்ட் 28 இன் 2/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தி பிரகாரம் அரச நிதி திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்படும் படிவம் பிரகாரம் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை தயாரிக்க வேண்டியிருந்தது. 2018 இன் 19 இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(2) பிரிவின் பிரகாரம் இந்த செயலாற்றுகை அறிக்கையை வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டிற்காக தயாரிக்கப்பட்ட நகழ் செயலாற்றுகை அறிக்கையின் "இலக்கம் 1462/20 மற்றும் 2006.09.13 திகதிய அதிவிசேட வர்த்தமானியினால் மற்றும் 2015 மார்ச் 05 இன் அமப/15/0089/610/003 இலக்க	கணக்காய்வு முகாமைத்துவ குழு தீர்மானம் பிரகாரம் தற்போது அமைச்சினால் திணைக்களத்தின் பிரச்சினைகளை தீர்க்க குழுவொன்றை நியமிக்க நடவடிக்கை எத்துள்ளதால், அக் குழு ஊடாக திணைக்களத்தின் விடயப்	செயலாற்றுகை அறிக்கையில் திணைக்களத்தின் பணிகளை குறிப்பிடும் போது சரியான தகவல்களை உள்ளடக்க வேண்டும்.

அமைச்சரவை பத்திரத்தின் மூலம் அரசினால் ஒப்படைத்துள்ள மேலதிக பணிகளாக நாடு முழுவதும் நெல், தானியங்கள், மரக்கறி, பழங்கள் போன்ற பாரியளவிலான கருத்திட்டங்கள் மூலம் நாட்டின் தேசிய உணவு உற்பத்தியை வழுவூட்டுதல், குறைந்த வசதியுடைய கஸ்டப் பிரதேசங்களில் அமைந்துள்ள ஆரம்ப மாணவர் அபிவிருத்தி நிலையங்கள் மூலம் குழந்தைகள் பரம்பறை ஒன்றை உருவாக்க உதவுதல், ஆசிரியர் பற்றாக்குறை நிலவும் கஷ்டப் பிரதேச பாடசாலைகளிற்கு சுயாதீன அடிப்படையில் ஆசிரியர்களை பெற்றுக் கொடுத்தல் மற்றும் வடக்கிலும் வடமத்திய பிரதேசங்களை மேவுகை செய்யும் வகையில் பாரிய அளவிலான நீர் சுத்திகரிப்பு இயந்திர நிலையங்கயை அமைத்தல் மற்றும் பராமரித்தல்'' குறிப்பிடப்பட்டிருந்த போதும், மேற்குறித்த வர்தமானி மற்றும் அமைச்சரவை பத்திரத்தினுள் அப்பணிகள் உள்ளடக்கப்படவில்லை.	பரப்பை முடிவு செய்து கொள்ள எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன்.	

4.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	இலக்கம் 63 – 4945 கொண்ட பேரூந்து வண்டியின் திருத்தம் தொடர்பாக மதிப்பீடு தயாரித்தல் மற்றும் விலைமணு சமர்ப்பித்தலை பகுத்தாய்ந்து பார்க்கும் போது இருக்கை கவரிடல் மற்றும் திருத்துதல் இந்த பெறுகையின் விசேட விடயமாவதுடன், அந்த பணிகளை வெவ் வேறாக அதற்காக விசேடமான நிறுவனங்களில் செய்து கொள்ள வேண்டிய போதும் அதற்கு பொருந்தும் வகையில் அளவுத் திட்டங்களை தயாரித்து விலைமணு கோரியிருக்கவில்லை.	எதிர்காலத்தில் விசேட திருத்தங்களை வேறாக விலைமணு கோர மற்றும் இவ்வாறான திருத்தங்கிற்கான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு குறித்த துறைசாரந்த அறிவுள்ள அலுவலர் ஒருவரை பெயரிட போக்குவரத்து பிரிவிற்கு உரிய அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	திருத்தங்களை சரியாக இனங்கண்டு தேவையான அளவுத் திட்டங்களை தயாரித்து பெறுகைகள் நடவடிக்கை மேற்கொள்ள பொறுப்பேற்க வேண்டும்.

(ஆ)	மீளாய்வாண்டில் ரூபா 1,964,409 செலவில் 190 மெத்தைகளை கொள்வனவு செய்யும் போது அதற்காக 2024 சனவரி 17 திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்து 6x3x4 அளவான 220 இரட்டை அடுக்கு மெத்தைகளை கொள்வனவு செய்ய தேவையான அளவுத்திட்டங்கள் மற்றும் தேவைப்பாட்டை இனங்கண்டு 2022 சனவரி 22 திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க ஒப்படைத்திருந்த போதும் உரிய திகதியில் அளவுத்திட்டத்தை வழங்கியிருக்கவில்மல எனினும், 2024 ஆகஸ்ட் 12 திகதி வழங்கியிருந்த தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையில் பெறுகைகள் கைநூலின் 7.11.1 இல் ''விலைமணு மதிப்பீட்டு அறிக்கை'' பிரகாரம் அனைத்து மணுதாரரிற்கும், தொழில்நுட்ப அளவுத்திட்டத்தின் முக்கிய ஏற்பாடுகளிற்கு மணுதாரர்களின் தகைமையை காண்பிக்கும் அட்டவணை ஒன்றை உள்ளடக்கி இருக்கவில்லை.	தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவிற்கு உரிய கால அளவில் நடவடிக்கை எடுப்பதற்காக அறிவுரை வழங்கியுள்ளதுடன், மதிப்பீட்டறிக்கையை பெறுகைகள் வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளிற்கு இணக்க தயாரித்து சமர்ப்பிப்பது தொடர்பாக அறிவுரை, தொழில்நுட்பக் குழு நியமிக்கும் சந்தர்ப்பத்தில் வழங்க தற்போது நடவடிக்கை எடுத்துள்ளதென.	தாமதமின்றி அளவுத் திட்டத்தை தயாரித்து சமர்ப்பித்தலும் மதிப்பீட்டறிக்கையை பூரணமாக மற்றும் சரியாக சமர்ப்பிக்கவும் பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	ரூபா 12,282,200 செலவில் பச்சை நிற 20,000 கால் உறைகளை கொள்வனவு செய்யும் போது விலைமணு அழைப்பில் 35,000 கால் உறை சோடிகளிற்காக விலைமணு கோரியிருந்த போதும், தேவைப்பாடு தொடர்பாக சரியான மதிப்பீடொன்று இல்லாததன் மீது 20,000 கால் உறைகளை மாத்திரம் கொள்வனவு செய்திருந்தது. மேலும், பரிந்துரைக்காக பெறுகைகள் குழுவின் ஒரு அங்கத்தவர் இணங்குவதா, இல்லையா எனக் குறிப்பிட்டிருக்காமை, பரீட்சிப்பிற்காக மாதிரிகளை இலங்கை தரநிர்ணய நிறுவனத்திற்கு வழங்க 03 மாதங்களை விட அதிக காலம் எடுத்தமை, விலைமணு மதிப்பீட்டிற்காக 26 வாரங்களிற்கு அதிக காலம் எடுத்துள்ளமை, பெறுகைகள் குழுவினால் 2023 திசெம்பர் 08 திகதி ரூபா 11,970,000 இற்கு கொள்வனவு	நிறுவன தாமதத்தை தவிர்த்து எதிர்காலத்தில் இவ்வாறான அவதானங்கள் மீண்டும் ஏற்படாதவாறு கட்டுப்பாடொன்றை இட்டுள்ளதாக தயவுடன் அறிவிக்கிறேன். அதன் பிரகாரம் காலசூசியின் பிரகாரம் காலத்தை முகாமைத்துவம் செய்து நடவடிக்கை எடுக்க எதிர்பார்ப்பதாக அறிவிக்கிறேன்.	பெறுகைகள் வழிகாட்டி பிரகாரம் பெறுகைகளிற்கு முன்னர் தேவைப்பாட்டை உரியவாறு இனங்காண வேண்டியமை, தீர்மானத்திற்காக பெறுகைகள் குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் பரிந்துரை வழங்க வேண்டியமை மற்றும் தாமதமின்றி குழு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

	செய்ய தீர்மானிக்கும் சந்தர்ப்பத்தில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி சதவீதம் 18 வரை அதிகரித்திருந்ததன் மீதி ரூபா 312,261 மேலதிக தொகையை வரியாக செலுத்த நேரிட்டமை போன்ற பெறுகைகள் பலவீனங்கள் காணப்பட்டன.		
(ஈ)	வென்னவத்த படையின் கட்டிடத்தை திருத்துவதற்காக ரூபா 1,094,779 செலவிட்டிருந்த போதும் அந்த பெறுகையின் தொழிநுட்ப குழுவின் ஒரு அங்கத்தவர் கையொப்பமிட்டு இருக்கவில்லை. மேலும் 2024 சனவரி 11 திகதி பெறுகைகள் குழுவினால் முடிவை வழங்கியிருந்த போதும், குழுவின் இரண்டு அங்கத்தவர்கள் அந்த பெறுகைக்காக இணங்குவதா இல்லையா என குறிப்பிட்டிருகக்வில்லை. அதன் பிரகாரம் உரிய அங்கீகாரமற்ற பெறுகைக்காக மேற்குறித்த நிதி செலவிடப்பட்டிருந்தது.	கணக்காய்வினால் அவதானிக்கப்பட்ட CSD/LOG/B/346/2023 கோவையின் தொழில்நுட்ப மற்றும் மதிப்பீட்டுக் குழு அறிக்கைக்காக ஒரு அங்கத்தவரின் கையொப்பத்தை பெற்றுக் கொள்ள தவறியுள்ளதுடன் அதனை விரைவில் சரிசெய்ய அறிவுரை வழங்கியுள்ளதாக அறிவிக்கிறேன்.	பெறுகைகள் செயற் கோவை பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைகள் குழு அங்கத்தவர்கள் அவர்களின் கையொப்பத்தை இட்டு குழு முடிவுகளை சமர்ப்பிக்க நடவடிககை எடுக்க வேண்டும்.

4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் 574 வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் காணப்பட்டதுடன் போக்கு வரத்து பிரிவின் அட்டவணை பிரகாரம் 32 வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் குறைவாக அதாவது 544 மாத்திரம் காணப்பட்டன. மேலும், நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தியிருந்த ரூபா 28,058,975 பெறுமதியான 60 வாகனங்கள் போக்கு வரத்து பிரிவின் அட்டவணையில் உட்படுத்தி இருக்காததுடன் போக்கு வரத்து பிரிவின் அட்டவணை பிரகாரம் காணப்பட்ட 17 வாகனங்கள் நிதிக்கூக்களில் உட்படுத்தியிருக்கவில்லை.	16 வாகனங்களை திணைக்களத்திற்கு 2024/12/31 திகதி வரை உரிமையை சுவீகரித்திருக்காததால் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்படவில்லை என அறிவிக்கிறேன்.	நிதிக்கூற்றுக்கள் அட்டவணை பிரகாரம் காணப்படும் முரண்பாட்டை இனங்கண்டு சரிசெய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் திணைக்களம் பயன்படுத்தும் சுவீகரிக்காத வாகனங்களின் உரிமையை விரைவில் சுவீகரித்து கணக்கீடு செய்ய நடவடிககை எடுக்க வேண்டும்.

(ஆ)	போக்குவரத்து பிரிவு மற்றும் கணக்கு பிரிவு ஆகிய இரண்டினது அறிக்கைகளில் உட்படுத்தப்படாத சிவில் பாதுகாப்பு திணைக்களம் எனும் பெயரில் பதிவு செய்யப்பட்ட 16 வாகனங்கள் காணப்பட்டன.	16 அளவான வாகனங்களின் தகவல்கள் போக்குவரத்து பிரிவில் இல்லாததுடன் அதனை பரீட்சித்து வருவதென.	திணைக்களத்தின் பெயரில் உள்ள போதும் பௌதீக ரீதியாக இல்லாத வாகனங்கள் தொடர்பாக விரைவில் புலனாய்வொன்றை மேற்கொள்ள வேண்டும்.
(இ)	திணைக்களம் தற்போது பயன்படுத்தும் 27 வாகனங்களின் மற்றும் பராதீனத்திறகாக உத்தேசித்துள்ள 25 வாகனங்களின் சட்டரீதியான உரிமை திணைக்களத்திற்கு இருக்கவில்லை.	இவற்றை சுவீகரிக்க நீண்ட காலம் செல்கின்ற போதும் தற்போது அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.	சட்டரீதியான உரிமையை சுவீகரித்துக் கொள்ள நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஈ)	கணக்கு பிரிவினால் ரூபா 69,310,000 இற்கு கணக்கீடு செய்திருந்த 6 பிரதேசங்களில் அமைந்துள்ள 176 ஏக்கர் 3 ரூட் 39.5 பர்சஸ் கணக்குகள் காணப்பட்ட போதும் திணைக்களத்திற்கு சொந்தமாக அவ்வாறான 6 காணித் துண்டுகள் இல்லையென நிர்வாகப் பிரிவினால் வழங்கிய தகவல்களின் பிரகாரம் அவதானிக்கப்படுகின்றது.	காணி அளவுகளிற்கு இடையே காணப்படும் வித்தியாசம் தொடர்பாக தங்கள் அவதானிப்பு, உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களின் அவதானிப்புக்கள் தொடர்பாக திணைக்களத்தினால் விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக சபை ஒன்றை நியமிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.	கணக்கு பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவுகளின் தகவல்களிற்கு இடையே காணப்படும் வித்தியாசத்தை அகற்றி சரியான தகவல்களை பேணிச் செல்ல நடவடிககை எடுக்க வேண்டும்.
(உ)	கணக்கு பிரிவினால் ரூபா 198,846,000 இற்கு கணக்கீடு செய்திருந்த 4 பிரதேசங்களில் அமைந்துள்ள 4 காணித் துண்டுகளின் 121 ஏக்கர் 2 ரூட் 33.12 பர்சஸ் ஆக கணக்குகளில் காணப்பட்ட போதும் நிர்வாகப் பிரிவின் தகவல்களின் பிரகாரம் அக் காணிகளின் அளவு 33 ஏக்கர் 2 ரூட் 35.48 பர்சஸ்கள் ஆனதில் 88 ஏக்கர் அளவான வித்தியாசம் இரு பிரிவுகளினதும் அறிக்கை பிரகாரம் காணப்பட்டது.	காணி அளவுகளிற்கு இடையே காணப்படும் வித்தியாசம் தொடர்பான அவதானிப்பு தொடர்பாக கண்டறிய குழுவொன்று நியமித்து விரைவில் நடவடிக்கை எடுப்பதென.	கணக்கு பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவுகளின் தகவல்களிற்கு இடையே காணப்படும் வித்தியாசத்தை அகற்றி சரியான தகவல்களை பேணிச் செல்ல நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஊ)	சிரி புர உப படைப் பிரிவு அமைந்துள்ள 1 ரூட் 28.4 பர்சஸ் காணி கணக்குப் பிரிவினால் ரூபா 513,000 இற்கு கணக்கு வைத்துள்ள போதும் நிர்வாகப் பிரிவின்	அறிக்கையிட்டக் காணப்படும் காணிகளை மீண்டும் பௌதீக ரீதியாக பரீட்சிப்பதாகவும், காணி அளவுகளிற்கிடையே காணப்படும் வித்தியாசம் தொடர்பாக தங்கள்	கணக்கு பிரிவு மற்றும் நிர்வாகப் பிரிவுகளின் தகவல்களிற்கு இடையே காணப்படும் வித்தியாசத்தை அகற்றி சரியான

	தகவல்களின் பிரகாரம் சிரி புர உப படைப் பிரிவின் மேற்குறித்த நிலஅளவு காட்டப்படவில்லை.	அவதானிப்பு மற்றும் உள்ளக கணக்காய்வு ஐயவினாக்களின் அவதானிப்பு தொடர்பாக திணைக்களத்தினால் விசாரணையொன்றை மேற்கொள்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன்.	தகவல்களை பேணிச் செல்ல நடவடிககை எடுக்க வேண்டும்.
(எ)	நீண்ட காலமாக தீவின் பல பிரதேசங்களில் அமைந்துள்ள திணைக்களம் பயன்படுத்தும் 563 காணித் துண்டுகளில் 32 காணித் துண்டுகளிற்குரிய 19.1421 ஹெக்டயார் அளவை மாத்திரம் சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருந்ததுடன், எஞ்சிய 531 காணித் துண்டுகளின் உரிமையை மீளாய்வாண்டு இறுதி வரை சுவீகரிப்பு நடவடிக்கைகள் நிறைவடைந்திருக்கவில்லை.	மீளாய்வாண்டு இறுதி வரை 531 காணித் துண்டுகளில் முறையாக சுவீகரிக்க முடியுமான 284 காணிகளை இனங்கண்டு அவற்றை சுவீகரிப்பதற்குரிய நிறுவனங்களுடன் ஒருங்கணைந்து செயற்பட்டு வருவதென அறிவிக்கிறேன.	திணைக்களத்தனால் பயன்படுத்தும் காணிகளின் சட்டபூர்வமான உரிமையை விரைவில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.4 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைப்பு

கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
நிதிப்பிரமாணம் 880 மற்றும் 891 பிரகாரம் திணைக்களத்தில் பிணை வைக்க வேண்டிய 07 நிறைவேற்று பதவிகளிற்கு மற்றும் 02 இரண்டாம் நிலை பதவிகளிற்குரிய 73 உத்தியோகத்தர்களினால் குறித்த பிணை வைத்திருக்கவில்லை.	தற்போது பிணை வைத்த உத்தியோகத்தர்கள் வேறு இடங்களிற்கு இடம் மாறி வேறு உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். அதன் பரகாரம் அந்த உத்தியோகத்தர்களிடமிருந்து நி.பி.880 பிரகாரம் பிணை வைப்பினை செய்து கொள்ள என்னால அறிவுரை வழங்கியுள்ளதாக அறிவிக்கிறேன்.	நிதிப்பிரமாணம் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களிடம் பிணை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.5 நட்டம் மற்றும் சேதங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	நிதிப்பிரமாணம் 104(3) பிரகாரம் முழுமையான அறிக்கையை சமர்ப்பிக்க 07 நாட்களை விட தாமதமாகும் என எதிர்பார்க்கப்பட்டால், ஆரம்ப அறிக்கையொன்றையையும், நிதிப்பிரமாணம் 104(4) பிரகாரம் நட்ட சேதம் இடம்பெற்ற திகதியிலிருந்து 03 மாதங்களிற்குள் முழுமையான அறிக்கையையும் சமர்ப்பிக்க வேண்டிய போதும் திணைக்களத்தில் இடம்பெற்றிருந்த 56 சேதங்கள் மற்றும் நட்ட சம்பவங்களிற்குரிய அறிக்கை மற்றும் பரிந்துரைகள் 60 நாட்களிற்கும் 04 ஆண்டுகளிற்கும் இடையிலான வீச்சளவில் தாமதமாகியிருந்தது.	அனைத்து சேதங்கள் மற்றும நட்டங்கள் தொடர்பாகவும் எதிர்காலத்தில் நி.பி பிரகாரம் விரைவில் செயற்படுவது தொடர்பாக என்னால் அறிவுரை வழங்கியுள்ளதாக தங்களிற்கு தயவுடன் அறிவிக்கிறேன்.	தாமதமாகியுள்ள முழுமையான அறிக்கைகளை விரைவில் பெற்று பரிந்துரைகளை நடைமுறைப்படுத்த வேண்டும்.
(ஆ)	10 சேதங்கள் மற்றும் நட்ட சம்பவங்களிற்குரிய சபை அறிக்கை பிரகாரம் பொறுப்பு வாய்ந்த தரப்பினரிடமிருந்து ரூபா 6,295,433 தொகையை அறவிட பரிந்துரைத்திருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரை அத் தொகையை அறவிட திணைக்களத்திற்கு இயலாதிருந்தது.	குறித்த இராணுவ உத்தியோகத்தர்களிற்கு ஒழுக்காற்றுடன் நடந்து கொள்ளுமாறு இராணவத்திற்கு அறிவுருத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அதன் பிரகாரம் நட்டத்தை அறவிட ஒழுக்காறு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.	சபை அறிக்கை பிரகாரம் பரிந்துரைத்த தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	வெலிசர் விசேட கருத்திட்டம் மூலம் நடாத்திச் சென்ற வெளிப்படையிடம் இருந்து அறிக்கையிடப்படும் படையினரிறிகு உணவு வழங்கும் செயன்முறை மற்றும் படையினால் உற்பத்தி செய்யப்படும் அரிசி/ தானியங்களை விற்பனை செய்யும் செயன்முறையில் இடம்பெற்ற முறைகேடுகள் தொடர்பாக எவ்வித பதிவும் சேத நட்ட பதிவேட்டில் அல்லது நிதிக்கூற்றுக்களில் இணைப்பு ii இல் உள்ளடக்கி இருக்காததுடன் அந்த நிதி முறைகேட்டை செய்த உத்தியோகத்தர்களி இடமிருந்து ரூபா 20,795,972 தொகையை திணைக்களத்திற்கு அறவிட வேண்டிய போதும் அது தொடர்பாக எவ்வித செயற்பாடுகளையும் எடுத்திருக்கவில்லை.	தற்போது குற்றப் புலனாய்வு திணைக்களத்திற்கு இது தொடர்பாக விசாரணை ஒன்றை மேற்கொள்ள அறவித்து, சட்ட நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன்.	நட்டத்திற்கு பொறுப்பு வாய்ந்த தரப்பினரை சரியாக இனங்காண வேண்டியதுடன் சபை அறிக்கை பிரகாரம் பரந்துரைத்த தொகையை அறவிட நடவடிகககை எடுக்க வேண்டும்.

4.6 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

	கணக்காய்வு அவதானிப்பு	கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை	பரிந்துரை
(அ)	கடுநாயக படைப்பிரிவில் இணைக்கப்பட்ட 61 படையினர் 25 மதத்தளங்களை நிர்மாணித்தல், நலன்புரி, சாரதி மற்றும் பாதுகாப்ப நடவடிக்கைகளிற்காக அமர்த்தப்பட்டிருந்தனர். அவற்றில் 12 மதத்தளங்களிற்காக 11 ஆண்டுகளிற்கு அதிக காலமாக 30 படையினர் எழுத்துமூல அங்கீகாரமின்றி ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். எனினும், எழுத்துமூல அங்கீகாரத்தின் மீது 2018 முதல் மதத்தளங்களில் அமர்த்தியிருந்த 10 படையினரிற்கு உரியதாக திட்டவட்டமான காலஎல்லை குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.	எழுத்துமூல அங்கீகாரமின்றி, கடுநாயக படைப்பிரிவின் மூலம் படையினரை ஈடுபடுத்தியுள்ள 12 விகாரைகளிற்கும் தற்போதைய தேவைப்பாட்டை மீளாய்வு செய்து, அத்தியவசிய இஸ்தானங்களிற்கு குறுகிய கால அடிப்படையில் எழுத்துமூல அங்கீகாரத்தை வழங்க செயற்பாட்டு பிரிவிற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன் தற்போது அதன் பிரகாரம் செயற்பட்டு வருவதாக அறிவிக்கிறேன்.	உரிய அங்கீகாரத்தின் கீழ் மற்றும் மேற்பார்வையுடன் திட்டவட்டமான காலத்திற்காக படையினரை வேறு கடமைகளிற்கு ஈடுபடுத்த வேண்டும்.
(ஆ)	வில்பத்து படைப்பிரிவின் படையினர்களில் 129 படையினர் 58 மதத்தளங்களிற்கு கொத்தர் தொழில், நீர்க்குழாய் தொழல், சாரதி, பாதுகாப்பு, நிர்மாண மற்றும் நலன்புரி கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அதில் 11 மதத்தளங்களில்கு 16 படையினரை அமர்த்த மாத்திரம் எழுத்துமூல அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்துடன் திட்டவட்டமான காலஎல்லை குறிப்பிடப்படாததன் மீது 04 மாதங்கள் முதல் 05 ஆண்டுகள் கால வீச்சளவில் அந்த தளங்களில் கடமை மேற்கொண்டிருந்தனர். மேலும், எழுத்துமூல அங்கீகாரமின்றி 47 மதத்தளங்களிற்காக 2015 ஆண்டு முதல் 113 படையினர் ஈடுபடுத்தியிருந்தனர்.	தற்போது எழுத்துமூல அங்கீகாரத்தை தற்காலிகமாக வழங்க செயற்பட்டுள்ளது. மதத்தளங்களிற்கு படையினரின் ஊதியத்தை வழங்குவது தொடர்பாக அரச கணக்குகள மீதான செயற்குழுவில் கலந்துரையாடப்பட்டதுடன், எதிர்காலத்தில் கொள்கை ரீதியான தீர்மாமொன்றை எடுக்க எதிர்பார்ப்பதென.	உரிய அங்கீகாரத்தின் கீழ் மற்றும் மேற்பார்வையுடன் திட்டவட்டமான காலத்திற்காக படையினரை வேறு கடமைகளிற்கு ஈடுபடுத்த வேண்டும்.
(இ)	கெபதிகொல்லாவ படைப்பிரிவின் 79 படையினர் மதத்தளங்களில் நிர்மாணித்தல், நலன்புரி மற்றும் பாதுகாப்பு பணிகளிற்காக கால வரையரையின்றி ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். அவற்றில் ஒரு மதத்தளத்தில் நலன்புரி பணிகளிற்காக அமர்த்தப்பட்ட மூன்று படையினர் 17	இந்த விடயம் தொடர்பாக அரச கணக்குகள் மீதான செயற்குழுவிலும் கலந்துரையாடப்பட்ட போதும், சட்டரீதியான முடிவுகள் ஏதும் எடுக்கப்படாததுடன், நீண்ட காலமாக அவ்விடத்திற்கு இணைக்கப்பட்டுள்ள சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்களை	உரிய அங்கீகாரத்தின் கீழ் மற்றும் மேற்பார்வையுடன் திட்டவட்டமான காலத்திற்காக இடமாற்ற செயன்முறையை கவனத்திற்

	வருடங்களிற்கு அதிக காலமாக அவ்விடத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	இடமாற்றம் செய்வதில் நடைமுறை ரீதியான கடினநிலை காணப்படுகின்றது. எனினும் இந்த உணர்வுபூர்வமான பிரச்சினைக்கு படிப்படியாக நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகிறேன்.	கொண்டு படையினரை வேறு கடமைகளிற்கு ஈடுபடுத்த வேண்டும்.
(ஈ)	2006 செப்டம்பர் 13 இன் 1462/20 இலக்க அதிவிசேட வர்த்தமானியில் மற்றும் 2015 மார்ச் 05 இன் அமப/15/0089/610/003 இலக்க அமைச்சரவை பத்திரம் மூலம் அரசினால் ஒப்படைத்துள்ள மேலதிக கடமைகளிற்கு முரணாக திணைக்களத்திற்கு ஒப்படைத்துள்ள கடமைகளில் இல்லாத பாடசாலை ஆசிரியர் கடமைக்காக ஹொரவ்பதான படைப்பிரின் 5 படையினர், கெபதிகொல்லாவ படைப்பிரின் 26 படையினர் மற்றும் வில்பத்து படைப்பிரின் 18 படையினரும் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.	நாட்டில் நிலவிய யுத்த சூழல் முடிவடைந்த பின்னர் கடினப் பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறைக்காக அந்த அதிகாரிகளின் கோரிக்கை பிரகாரம் இந்த சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்கள் பாடசாலைகளில் ஈடுபடுத்தியுள்ளதாக அறிவிக்கிறேன். தற்போது ஆசிரியர் வெற்றிடங்கள் காணப்படுவதால் அந்த கஷ்டப் பாடசாலைகளிற்கு இந்த சிவில் பாதுகாப்பு அங்கத்தவர்களின் சேவையை தொடர்ந்தும் பெற்றுக் கொள்வதாக அறிவிக்கிறேன்.	அமைச்சரவை தீர்மானம் பிரகாரம் அங்கீகார கடமைகளிற்கு மாத்திரம் படையினரை இணைக்க நடவடிககை எடுக்க வேண்டும்.
(உ)	ஹொரவ்பதான படைப்பிரிவு வளவினுள் கருங்காளி, குருதா, வீர, மருதை, வெலங் போன்ற 500 இற்கும் அதிக அளவான மரங்கள் காணப்பட்டதுடன் அந்த மரங்களை இலக்கமிட்டு ஆவணப்படுத்தி கணக்குகளில் காண்பிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	ஹொரவ்பதான படைப்பிரிவு தலைமையக வளவில் காணப்படும் மரப் பெறுமதியுள்ள 500 இற்கும் அதிக மரங்களை வெவ்வேறாக வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றை இலக்கமிட்டு ஆவணப்படுத்த தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.	படைப்பிரிவு இடங்களிலுள்ள பெறுமதியான பலகை மரங்களை இலக்கமிட்டு ஆவணப்படுத்த மற்றும் நிதக்கூற்றுக்களின் மூலம் காண்பிக்க நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஊ)	கெபதிகொல்லாவ படைப்பிரிவினால் 2022 மற்றும் 2023 ஆண்டுகளில் வெள்ளை பச்சை, குரக்கன், ளெகபி, வாழை, பச்சை மிளகாய், குரக்கன் மா, வெண்டிக்காய், மரவள்ளி, செத்தல் மிளகாய் ஆகிய அருவடை 1,020.6 கிலோ கிராம், 1,815 விளக்குமார்கள் மற்றும் 932 தேங்காய்களை சேவா வனிதா அலகிற்கு வழங்கியிருந்த போதும் மீளாய்வாண்டு இறுதி வரை அதற்காக பணம் செலுத்தியிருக்கவில்லை.	சேவா வனிதா அலகிற்கு ஒப்படைத்துள்ள உருப்படிகள் தொடர்பாக கண்டறிந்து அந்த கொடுக்கல் வாங்கல்களை வரைவில் தீர்க்குமாறு சேவா வனிதா பிரிவிற்கு அறிவுரை வழங்கியுள்ளதென.	விரைவில் தொகையை அறவிட நடவடிககை எடுக்க வேண்டும்.

(ஏ)	முற்பணக் கணக்கில் காணப்பட்ட 215 மரணித்த உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 7,760,450 தொகை கடன் மீதி காணப்பட்டதுடன், அவற்றில் 12 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 5 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான பழைய ரூபா 1,361,027 கடன் மீதி மற்றும் 4 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய 3 ஆண்டிற்கும் 5 ஆண்டுகளிற்கும் இடையிலான பழைய ரூபா 384,630 கடன் மீதி உள்ளடக்கப்பட்டிருந்தது.	215 மரணித்த உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடனை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிட ஓய்வூதிய திணைக்களத்திற்கு அறிவித்துள்ளதுடன், அத் திணைக்களத்தினால் குறித்த கடன் தொகையை பணிக்கொடையிலிருந்து கழித்து அனுப்பிய பின்னர் குறித்த மீதியை திர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிட நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஏ)	முற்பணக் கணக்கில் காணப்பட்ட 159 ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,395,184 பெறுமதியான கடன் மீதி காணப்பட்டதுடன், அக்கடன் மீதியினுள் இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய 03 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான பழைய ரூபா 237,799 கடன் மீதி மற்றும் 74 உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,794,470 ஆண்டு 01 இற்கும் 03 இற்குமிடையிலான பழைய கடன் மீதியுமானது.	ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்கள் தொடர்பாக காணப்படும் கடன் மீதிகளை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து அறவிட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன்.	நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிட நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஐ)	வேலைத் தடை செய்யப்பட்ட 59 நபர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 1,569,229 பெறுமதியான கடன் மீதி காணப்பட்டதுடன், அக் கடன் மீதியினுள் 4 உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 460,460 பெறுமதியான 03 ஆண்டிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான பழைய கடன் மீதி மற்றும் 29 உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 547,247 பெறுமதியான ஆண்டு 01 இற்கும் 03 இற்குமிடையிலான பழைய கடன் மீதியுமானது.	வேலைத் தடை செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் விசாரணை நடவடிக்கைகள் முடிவடைந்தவுடன் சில உத்தியோகத்தர்களிற்கு மீண்டும் சேவையை வழங்குவதுடன் அவர்களின் கடன் தொகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும், குறித்த உத்தியோகத்தர்களிற்கு கடன் மீதிகளை செலுத்மாறு அறிவிதது, கடிதம் அனுப்பியுள்ளதாக அறிவிக்கிறேன்.	நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிட நடவடிககை எடுக்க வேண்டும்.

(ஒ)	சேவையை விட்டுச் சென்ற 566 உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவிட வேண்டிய ரூபா 27,662,877 பெறுமதியான கடன் மீதிகளை மீளாய்வாண்டு இறுதி வரை அறவிட வேண்டியிருந்ததுடன், அக்கடன் மீதியினுள் 30 உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய 05 ஆண்டுகளிற்கும் 10 ஆண்டுகளிற்கும் இடையிலான ரூபா 4,188,543 ஆன கடன் மீதி மற்றும் 43 உத்தியோகத்தர்கள் இடமிருந்து அறவிட வேண்டிய 03 இற்கும் 05 ஆண்டுகளிற்கும் இடையிலான பழைய ரூபா 5,707,821 ஆன கடன் மீதியும் காணப்பட்டது.	கடன் மீதிகளை விரைவில் அறவிட நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிக்கிறேன்.	நிலுவை கடன் தொகையை விரைவில் அறவிட நடவடிககை எடுக்க வேண்டும்.
(ஓ)	கெபதிகொல்ல படைப்பிரிவில் செயற்படும் பசுமைக்கூட மிளகாய் கருத்திட்டத்திற்காக 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் படைப்பிரிவிற்கு கிடைத்திருந்த பெறுமதி ரூபா 3,267,557 ஆன 19 இருப்பு உருப்படிகள் மற்றும் பெறுமதியை இனங்காண முடியாத 22 இருப்பு உருப்படிகள் ஆண்டு 02 இற்கும் 03 இற்குமிடையிலான காலமாக விளைவற்று காணப்பட்டன.	தற்போது அந்த உருப்படிகள் இயலுமானவரை திணைக்கள செயற்பாடுகளிற்காக பயன்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக அறிவிவிக்கிறேன். எஞ்சிய உருப்படிகளையும் தேவைப்பாடு காணப்படும் இடங்களிற்கு விரைவில் பகிர்ந்தளிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.	இருப்பு உருப்படிகளை பயன்படுத்தாதது தொடர்பாக புலனாய்வு செய்தல் மற்றும் குறித்த உருப்படிகளை ஆக்கபூர்வ பணிகளில் ஈடுபடுத்த நடவடிககை எடுக்க வேண்டும்.